THIRU B. VENKATASWAMY : Sir, may I request the Hon. Minister to say whether there is any proposal to bring down the rate of power tiller by reducing the cost of production ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தொழிற்சாலை வந்தவுடன் எப்படி உற்பத்திச் செலவைக் குறைத்து விலையைக் குறைக்கலாம் என்று பரிசீலிக்கலாம்.

காவிரி, வெண்ணாறு பாசன மேம்பாடுகள்

* 72 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் கல்லணை காவிரி-வெண்ணாறு ஆகிய நதிகளைச் சீரமைத்து அபிவிருத்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்தப் பணிகள் எப்போது செயல்படுத்தப்படும் ?

(உ) அதற்காகும் செலவுத் தொகை எவ்வளவு மதிப்பிடு ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ), (இ) & (உ) ஆம். 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் ரூ. 1,288.33 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டினைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் உரிய விரைவுத் திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு அரசு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது. 1972-73-ல் செலவிடுவதற்கு ரூ. 244.50 லட்சம் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கல்லணையிலிருந்து பிரிந்து, வெண்ணாறு-காவிரி ஆகியவற்றால் பயன்பெறுகின்ற, பழைய காவிரி கயவாய்ப் பகுதியின் பாசன ஏற்பாட்டைக் காலத்திற்கேற்ப மாற்றி அமைத்தலும் அடங்கும்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்காக இது வரையில் அரசு செலவழித்த தொகை எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு செலவு செய்ய ஒதுக்கிய தொகை ரூபாய் 244.50 லட்சம் என்று சொன்னேன். வேலை நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இதுவரையில் செலவிட்ட தொகைக்கான கணக்கு இப்பொழுது இல்லை.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தத் திட்டம் திருச்சி மாவட்டத்தில் காவிரியாற்றிலிருந்து பிரியும் கால்வாய்களுக்கும் பொருந்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது காவிரி, வெண்ணாறு ஆகிய நதிகளைப் பொறுத்த திட்டமாகும்.

1972 ஆகஸ்ட் 11]

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, இந்தக் கால்வாய் சீரமைப்பு வேலைகள் முழுவதும் முடிவடையாமல் அரைகுறையாக இருப்பதால் தண்ணீர்ப் பாசனம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு கால்வாயையும் எடுத்துக் கொண்டு வேலையை ஒரே ஆண்டிலே முடிப்பதற்கு அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஒரே ஆண்டில் முடிப்பது சாத்தியமில்லை என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே தான் நான்காண்டுத் திட்டமாகப் போட்டு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக் கின்றன.

*73 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் வடிகால் சீரமைப்புக்காக உலக வங்கி கடன் தர முன் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : காவிரி கயவாய்ப் பகுதியில், வடிகால் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ரூ. 680 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் பெருந்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பழைய காவிரி கயவாய்ப் பகுதி திட்டத்தைப் புதுப்பித்தல் குறித்த திட்ட அறிக்கையில் இது சேர்க்கப்பட்டுள்ளது. இது 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் இங்கு வந்திருந்த உலக வங்கி ஆய்வுக் குழுவின்முன் வைக்கப்பட்டது. திட்ட அறிக்கை, மத்திய நீர் மின்சார ஆணைக் குழுவின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வடிகால் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று பல்லாண்டு காலமாக கேட்டுக்கொண்டு வருகிறார்கள். அதை நிறைவேற்றாமல் இம்மாதிரி காலந்தாழ்த்துவது அந்த மாவட்டத்தினுடைய விவசாய அபிவிருத்திக்குப் பாதகமாக இருக்கிறது அல்லவா ? ஆகவே உடனடியாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் தீவிர முயற்சியெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1972-73-ஆம் ஆண்டில் தொடங்கி அடுத்த நான்கு ஆண்டுகளில் சுமார் 12 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவில் காவிரி கயவாய்ப் பாசனத் திட்டங்களை விரிவாக்க உத்தரவுகள் பிறப் பிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வடிகால் பிரச்னையைப் பொறுத்தும் சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. மேற்கொண்டும் துரிதப்படுத்தப் படும்.